கருத்தரங்க அறையில் நடத்துவதற்கு நெறிமுறைகள்

1) நெறியாளர் வாய்மொழித் தேர்வாளருடன் தொடர்பு கொண்டு, வாய்மொழித் தேர்வினை நடத்துவதற்குரிய விவரத்தை மாணவருக்கும், அலுவலகத்திற்கும் 15 நாள்களுக்கு முன் தெரிவித்தல் வேண்டும்.
2) சனி, ஞாயிறு மற்றம் விடுமுறை நாள்களில் வாய்மொழித் தேர்வு நடத்துவதைத் தவிர்க்கவும்.
3) புறத்தேர்வாளர் பயணப்படி , நாள்படி ரூ100 மற்றும் அமர்வுப்படி ரூ.500 கணக்கிட்டு 15 நாள்களுக்கு முன்னதாக முன்பணமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
4) வாய்மொழித் தேர்வுக்கு 15 நாள்களுக்கு முன்னர் ஆய்வேட்டின் ஒரு படியினை நூலகத்தில் பார்வைக்கு வைத்து பார்வையிட்டுள்ளோர் பட்டியலை அலுவலக்திற்கு அனுப்ப வேண்டும்.
5) வாய்மொழித் தேர்வு நடைபெறும் முதல் நாள் ஆய்வேட்டின் மதிப்பீட்டறிக்கையின் நகல்களை அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
6) தற்காலிகச் சான்றிதழ் வழங்குவதற்கு ஏதுவாக , நெறியாளர் ஆய்வாளரின் முதுநிலை பட்டச் சான்றிதழ், ஆய்வியல் நிறைஞர் பட்டச் சான்றிதழ், முனைவர் பட்ட பகுதி-1 தேர்வு விலக்களித்தல் கடிதம் ஆகியவற்றின் நகல்களை ஆய்வாளரிடமிருந்து பெற்றனுப்பவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணைய வழியில் நடத்துவதற்கான நெறிமுறைகள் (திருந்திய வரைவு : 05.09.2020)

1) வாய்மொழித் தேர்விற்கு 15 நாள்களுக்கு முன்னர் ஆய்வேடு நூலகத்தில் பார்வைக்கு வைக்கப்படும். தற்பொழுது ஆய்வேட்டைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்தில் பார்வைக்கு வைப்பத்துடன் முன்பு அளித்துள்ள ஆய்வுச் சுருக்கத்தையும் மென்படிவமாகத்(Pdf) தமிழ்ப் பல்கலைக்கழக இணையதளத்தில் 15 நாளிற்கு முன்னர் பதிவேற்ற வேண்டும்.
2) வாய்மொழித் தேர்வு நடைபெறுவது குறித்து கூட்டுநர்/நெறியாளர் அளிக்கும் அறிவிப்பில் இணையவழிப் பங்கேற்பதற்கான இணைப்பு முகவரி (Web link), கடவுச்சொல் (Password), பின்னூட்டப் படிவம் (Feedback Form) என்பனவற்றைத் தவறாது குறிப்பிட வேண்டும்.
3) இணைய இணைப்பை முன்னதாகச் சரிபார்த்தலும் இணையவழியான நடைமுறைகளைக் கூட்டுநர்/நெறியாளர், புறத்தேர்வாளர், ஆய்வு மாணவருடன் வாய்மொழித் தேர்விற்கு முன்னதாகப் பரிசோதனை செய்து பயிற்சி பெறுதல் அவசியம்.

4) வாய்மொழித் தேர்வு அறிக்கையை வன்படிவமாக அளிக்கும்போது இணைய வழியில் நடைபெற்ற வாய்மொழித் தேர்வின் பதிவை மென்படிவமாகவும் அளிக்க வேண்டும்.

5) நூலகத்தில் ஆய்வேட்டைப் பார்வையிட்ட பார்வையாளர்கள் பட்டியலை அளிக்கும் போது இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட ஆய்வுச் சுருக்கத்தைப் பார்வையிட்ட பார்வையாளர்களின் பட்டியலையும், வாய்மொழித் தேர்வில் இணையவழிப் பங்கேற்ற பங்கேற்பாளர்களின் பட்டியலையும் அளிக்க வேண்டும்.

6) ஆய்வுச்சுருக்கத்தை இணையத்தில் பதிவேற்றுதல், ஆய்வுச் சுருக்கத்தைப் பார்வையிட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை விவரங்களைப் பெறுதல், இணைய முகவரி, கடவுச் சொல், பின்னூட்டப்படிவம் முதலிய இணையம்சார் வழிமுறைகளுக்கு

முனைவர் அ.பா.கார்த்திக்ஆனந்த் பாபு
(ஒருங்கிணைப்பாளர், இணையவழிப் பொது வாய்மொழித் தேர்வுகள்) உதவிப் பேராசிரியர், கணிப்பொறி அறிவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
கைப்பேசி. 9443716281
மின்னஞ்சல் : karthickanandbabu.ab@gmail.com அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

7) ஆய்வேட்டின் மதிப்பீட்டு அறிக்கைகள் நெறியாளர்/கூட்டுநர், புறத்தேர்வாளர் அவர்களுக்கு மின்னஞ்சல் / அஞ்சல் வழியாக அனுப்பப்படும்.

8) புறத் தேர்வாளர்க்கு அளிக்கப்படும் ஆய்வேடு அவரது அலுவலகம் அல்லது இல்ல முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.

9) நெறியாளர்/கூட்டுநர் அவர்கள் வாய்மொழித் தேர்வின் நிறைவில் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கும் தேர்வு அறிக்கையைப் புறத்தேர்வாளரிடம் அஞ்சல் வழிப் பெற்று, உறுதி செய்து கையொப்பமிட்டு உரிய இணைப்புகளுடன், "தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், தமிழ்ப் பல்கலைக்கழகம் , தஞ்சாவூர்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

10) புறத்தேர்வாளருக்கான அமர்வுப்படி ரூபாய்1000/-த்தை நெறியாளர்/கூட்டுநர் அவர்கள் முன்பணமாகப் பெற்றுக் கொண்டு உரிய வழிமுறைகளின்படி அத்தொகையை ஈடுசெய்யலாம்.

11) வாய்மொழித் தேர்வு அறிக்கையுடன் இணைக்கப்பட வேண்டிய விவரங்கள்.

அ) நெறியாளர் அனைத்து பக்கங்களிலும் மேலொப்பம் செய்த ட்டியல்

i) ஆய்வுச் சுருக்கம் பார்வையிட்டோர் பட்டியல்

ii) நூலகத்தில் ஆய்வேட்டைப் பார்வையிட்டோர் பட்டியல்

iii) வாய்மொழித் தேர்வில் பங்கேற்றோர் பட்டியல்

ஆ) இணையவழி நடைபெற்ற வாய்மொழித் தேர்வின் காணொளிப் பதிவுகள் அடங்கிய குறுவட்டு (CD)

12) நிகழ்வு விவரங்கள் (நேர மேலாண்மை)

- புறத் தேர்வாளர் அறிமுகம் – நெறியாளர்/கூட்டுநர் ( 5 நிமிடங்கள்)
- புறத் தேர்வாளர் தேர்வைத் தொடங்கி வைத்தல் ( 5 நிமிடங்கள்)
- ஆய்வாளர் ஆய்வு முடிவுகளைச் சமர்ப்பித்தல் (30 – 40 நிமிடங்கள்)
- வினாக்கள் / ஐயங்கள் /கருத்துகள் ( 20 நிமிடங்கள்)
- புறத் தேர்வாளர் இறுதி அறிவிப்பு ( 5 நிமிடங்கள்)

07/09/2020

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் (பொ.)